மலைவாழ் மக்கள், பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

திரு. கா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் மாநில அரசு ஒரு சதவீதம் அளித்து வருகிறது. இதனால் மலைவாழ் மக்கள் பழங்குடியினர் படித்து இருந்தும் கூட, வேலை வாய்ப்பிற்கான அடிப்படைத் தகுதி இருந்தும் கூட அவர்கள் நிராகரிக்கப்படுகிறார்கள். மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு மத்திய அரசு $7\frac{1}{2}$ சதவீதம் அளித்து வருகிறது. ஆகவே, மலைவாழ் மக்கள், பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் 19—9—1991 அன்று சட்டப் பேரவையில் ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நல மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடந்தபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை எழுப்பினார்கள். ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு ஏற்ப உயர்த்துவதற்காக பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 178, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

178—

தரங்கம்பாடியில் மீன்பிடி துறைமுகம்.

*3300—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பூம்புகார் மற்றும் தரங்கம்பாடியில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பணி துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் வாழ்ந்து வரும் நமது இதய தெய்வம் ஆட்சியில் பூம்புகார் மற்றும் தரங்கம்பாடியில் கடல் மீனவர்கள் 30 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே அதிகமாக மீன் உற்பத்தியாகிற இடங்கள் இந்த இரண்டு இடங்கள் தான். ஆகவே, கருணை கூர்ந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இதை மறுபரிசீலனை செய்து பூம்புகாரிலும், தரங்கம்பாடியிலும் கப்பல் தளம் அமைக்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன்பிடித் துறைமுகம் தான் மாண்புமிகு அமைச்சருடைய பொறுப்பில் இருக்கிறது. நீங்கள் கப்பல் தளம் கேட்கிறீர்கள். ஆகவே, இதற்குத் தனிக்கேள்வி போடவும்.

வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-இன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—அரசு அலுவலகங்களின் வேலை நேரம் மாற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் அவைக்கு ரு முக்கிய அறிவிப்பை இப்போது வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசு அலுவலர்களின் சங்கங்கள் என்னைச் சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்து அவற்றின் மீது என்னுடன் பேசவேண்டுமென்று கேட்டு இருந்தார்கள். அக்கோரிக்கைகளை ஏற்று நான் அரசுப் பணியாளர்களின் சங்கப் பிரதிநிதிகளை 2—3—1992 அன்று சந்தித்துப் பேசினேன். அப்போது, தற்போது காலை 9-45 மணிக்குத் தொடங்கி மாலை 5-45 மணி வரை பணியாற்றும் அலுவலக நேரத்தை காலை 10-00 மணி முதல் மாலை 5-30 மணி வரை என்று மாற்றி அமைக்குமாறு சங்கப் பிரதிநிதிகள் கோரினார்கள். காலை வேளையில் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால் அலுவலகத்திற்கு 9-45 மணிக்கு வருவது என்பது சிரமமாக உள்ளது என்பதையும் குறிப்பாக அலுவலகத்தில்